# விடுதலைப் போராட்ட தளபதி

## இந் நூற்றாண்டு முன் வரிசை தலைவருள் முக்கிய இடம் பெற்றவர்

(o)

## கடைசிச் சொட்டு பலத்தையும் மக்கட் பணிக்கே செலவிட்டார்

(:o:)

## தி.மு.க. சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபம்

(o)

### அறிஞர் அண்ணா அறிக்கை

சர்தார் படேலின் திடீர் மரணம் அனைவருடைய உள்ளத்திலும் பெருத்த அதிர்ச்சியையும் ஆழ்ந்த துக்கத்தையும் உண்டாக்கிவிட்டது. உடல் நலமின்றி இருந்து வருகிறார் என்ற முதல் செய்தியை அடுத்து, குணமடைந்துவிட்டார் என்ற செய்தியும் கிடைத்து பலரும் ஆறுதல் பெற்றிருந்த நேரத்தில், சர்தார் மரணமானார் என்ற செய்தி தாக்கிவிட்டது. சோகம் இதனால் பல மடங்கு அதிகமாகிறது.

விடுதலைப் போராட்ட தளபதியாக விளங்கிய வீரர், தமது அறிவாற்றல் அவ்வளவையும் பொது மக்களுக்கே அர்ப்பணித்தார். இந்த நூற்றாண்டிலே தோன்றிய தலைவர்களின் முன் வரிசையில் முக்கியமான இடம் பெற்றவர் சர்தார் படேல். அவருடைய உள்ள உரம், விடுதலைப் போராட்டத்துக்கே ஓர் பெரிய துணைக் கருவியாக இருந்து வந்தது. அவருடைய கடமை உணர்ச்சி, அனைவருக்கும்-குறிப்பாக பொதுப் பணியிலீடுபட்டோருக்கு-புதியதோர் பாடமாக அமைந்திருந்தது. கொந்தளிப்பு மிகுந்த நேரம் இது. இந்த நெருக்கடியான நேரத்தில் உள்ள உரம் படைத்த சர்தாரின் மறைவு-பெரியதோர் நஷ்டம்-ஈடு செய்ய முடியாத நஷ்டமுமாகும்.

உடலிலும் உள்ளத்திலும் கடைசிச் சொட்டு பலம் இருந்த வரையில், அவ்வளவையும் மக்கள் பணிக்கே செலவிட்ட சர்தாரின் புகழ் என்றும் மறையாது-அவர் அமைத்து வைத்துள்ள சூழ்நிலையின் மூலம், பொதுப் பணி புரியும் பண்பினர் பலர் தோன்றுவர். அவருடைய மறைவு கேட்டு மனம் திடுக்கிட்டுப் போயுள்ளோர் ஏராளமானவர்கள், அவர் போல, அறிவாற்றலை, நாட்டுக்கு, மக்களுக்கு அர்ப்பணிக்க வேண்டும் என்ற தூய எண்ணம் பெறுவது தான் அனைவரும் அவருக்குக் காட்டக் கூடிய உண்மையான மரியாதையாகும். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே, அவருடைய மறைவு பற்றிய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

சி. என். அண்ணாதுரை

---

Regd: No. M. 5458 Phone No. 4502:

விலை அரை அணா இலங்கை 5 சதம்

# மாலை மணி

(திராவிடர் தமிழ் தினசரி கருத்திதழ்)

| மாலை 2 | சென்னை 17—12—50 | மணி 15 |
|---|---|---|

# சென்னை சர்க்கார் மண்டியிடும் போக்கு

(o)

## நூல் சப்ளை செய்வதில் ஏற்படும் கஷ்டம்

### மந்திரிகள் மாநாட்டில் விவாதிக்கப்படுமாம்

சென்னை, டிச. 14—

இந்த வார கடைசியில் பிரதம மந்திரி தலைமையில் கைத்தொழில் மந்திரியுடனும், கோவாபரேடிவ் ரிஜிஸ்டாருடனும், நூல் கட்டுப்பாடு அதிகாரியுடனும் கலந்து, சென்னை மாகாண நூல் சப்ளை நிலையை பரிசிலனைசெய்து, ஆவன செய்ய மத்திய சர்க்காரை வற்புறுத்தப்போவதாக சொல்லப்படுகிறது.

நூல்சப்ளை விஷயத்தில் இன்னும் அதிக அபிவிருத்திக்காட்ட வேண்டிய முயற்சிகள் எடுக்கப்படுமாம்.

இதற்காக அரிகிருஷ்ணமகதாப் (இந்தியா கைத்தொழில் மந்திரி) இந்த மாத கடைசியில் சென்னைக்கு வந்து நூல்சப்ளை விஷயத்தைப் பற்றி விவாதிப்பாரெனத் தெரிகிறது.

இப்பொழுது நம்நாட்டில் லட்சக்கணக்கான நெசவாளர் பட்டினி ஊர்வலம் நடத்திவருவது அவர்களின் காதுகளுக்கு எட்டவில்லையா? எட்டியும், ஊர்வலந்தானே அவர்களால் நடத்தமுடியும்; நம்மிடத்திலே உள்ள அஹிம்சா குண்டை வீசி அவர்களை அடிபணியச் செய்யலாம் என்று நினைத்துவிட்டார்களோ. லட்சக்கணக்கான நெசவாளர் திண்டாட்டத்தைக் கண்டு இன்னும், மத்திய சர்க்காரை வற்புறுத்துவோம் என்று கூறிக்கொண்டு இருக்கிறார்களே இது அவர்களின் அசட்டுத்தனத்தைத்தான் காட்டுகிறது.

ஒவ்வொன்றிற்கும் மத்திய அரசாங்கத்தின் கையை எதிர்பார்ப்பது என்பதுதான் மானமுடைய நமக்கு ஆத்திரத்தையூட்டுகிறது. இருக்கட்டும், இவர்களுக்கு ஓட்டுப் போட்டார்களே (நெசவாளத் தோழர்களும்) அவர்களைத்தான் குறை சொல்லவேண்டும். இனி மேலாவது வருகிற தேர்தலில் காருண்யமுள்ள காங்கிரசாருக்கு அதிகாரம் கொடுப்பார்களா என்பது நம்நாட்டின் அறிவுள்ள, மானமுள்ளவர்களின் எதிர்காலப் போக்கைப் பொருத்துஇருக்கிறது.

---

# பிரகாசம் கோஷ்டிக்கு கல்தா!

(:o:)

## சட்டசபை காங்கிரஸ் கட்சியில் இனி இடமில்லை

சென்னை, டிச. 15—

சென்னை சட்டசபை காங்கிரஸ் கட்சியின் நிர்வாகக் கமிட்டி கூட்டம் இன்று காலை நடைபெற்றது. கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டன.

கட்சி விதிகளின்படி ஏன் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக் கூடாதென்பதற்கு காரணம் காட்டும்படி டி. பிரகாசம், டி. விஸ்வநாதன், கே. ஆர். காரந்த், கோடிரெட்டி, நாகப்பா, பி. எஸ். மூர்த்தி ஆகிய ஆறு பேர்களுக்கும் நோட்டீஸ் கொடுக்கும்படியும் ஜனவரி முதல் தேதி வரை அவர்களுக்கு அவகாசம் அளிக்கப்பட்டுள்ளன.

தோழர் பிரகாசம் சட்டசபையில் கொண்டுவந்த 'மந்திரிகள்மீது புகார்' என்ற தீர்மானம் கட்சியில் நிராகரித்த பின்பும் கட்சியின் கொர்டா கேட்டுக்கொண்டும் பிரகாசம் அதை மீறி நடந்திருப்பதாக அவர்மீது குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

---

# செஞ்சீனாவுக்கு நஷ்டஈடு

(o)

## சுமார் பத்து கோடி ரூபாய் கொடுக்க அமெரிக்க சட்டசபை அனுமதி

வாஷிங்டன், டிச. 15—

இரண்டாவது உலக யுத்தத்தின் போது தென் சீன துறைமுகமான மகாப் மீது அமெரிக்க விமானங்கள் தவறிப் போய் குண்டு வீசியதால் ஏற்பட்ட நஷ்டத்திற்கு ஈடாக போர்ச்சுகல் தேச சர்க்காருக்கு சுமார் பத்து கோடி ரூபாய் கொடுக்க அமெரிக்க சட்டசபை இன்று ஒப்புக்கொண்டது.

... தேசத்திற்குச் சொந்தமானது.

1945-ம் ஆண்டில் ஜனவரி 16, பிப்ரவரி 25 தேதிகளில் தென்சீன துறைமுகத்தை ஜாப்பானிய பிரதேசமென்று அமெரிக்க விமானங்கள் தவறாக நினைத்து அதன் மீது குண்டு வீசின. ஆகவே அமெரிக்காவிடம் போர்ச்சுகல்தேசம் நஷ்ட...

# கோபுரம் ஏறி கோழி மேய்ப்பானேன்?

—(0)—

## குப்பைமேடு போதுமே!!

—(:0:)—

## புராணம் பேசப் புலமை வேண்டுமா?

### பழமைபேசி நீறுபூசிக் கண்டபலன்

### பஞ்சம்! பட்டினி! பரிதாபம்!

அ.ஸி.நர் —[பரதன்]— அண்ணா.

சீனநாட்டுச் சர்க்கார் சீறினர் ஒரு காலத்தில், தமிழகத்துக்குத் தங்கள் நாட்டுச் செல்வம் போய் விடுகிறதே என்று. தமிழ்நாட்டவர் கடலில் கலம் செலுத்தி வாணிபம் நடத்திப் பெரும்பொருள் ஈட்டினர். அந்த வாணிபத் துறையினால் சீன நாட்டுச் செல்வம் குறைந்து விடுவதாகக் கருதி, அந்நாட்டுச் சர்க்கார், தமது நாட்டவருக்குத் தடைவிதித்தனர், தமிழகத்தோடு வாணிபம் செய்வதை நிறுத்த. நாடுகள் எங்கும் சென்ற தமிழர், அகிலையும் சந்தனத்தையும், முத்துப்பவளத்தையும், ஆடைவகைகளையும் விற்றனர், தமிழகத்திலே கொண்டுவந்து பொருளைக் குவித்தனர். குவித்தனர்! வாழ்ந்தனரோ? இல்லை! மன்னர்கள், செல்வத்தில் புரண்டனர், மதக் குருமாராக ஆரியர் அமர்ந்தனர், ஆரிய மார்க்கத்தைப் புராணங்கள் புகுத்திவிட்டன, அரசனும் மக்களும் வாரி வாரி இறைத்தனர் பொன்னையும் மணியையும். குன்றெல்லாம் கோயில், மலைகளெல்லாம் குடையப்பட்டன, எங்கும் ஆலயம், ஆலயமெங்கணும் விலையுயர்ந்த நகைகள், விமரிசையான திருவிழாக்கள், இதன் பயனாக விளைந்ததென்ன? மக்கள் உழைத்து மன்னனிடம் தர, மன்னன் மகேசனிடம் தருவதாக எண்ணிக்கொண்டு மறையோரிடம் தர, மறையோர் உண்டுகொழுத்து ஊராள்வோனையும் மிரட்டும் நிலை பெற்றனர். மன்னர்கள், வெளிநாட்டிலிருந்துவந்த, பாடுபடாத கூட்டத்தாருக்குத் தருவதாகவா எண்ணினர்? இல்லை! பக்திக்காகத் தருவதாக எண்ணினர்! தாம் செய்யும் தானதருமம், ஆலயப்பணி யாவும் பிரமாதமில்லை, இவை எம்மாத்திரம், இல்லையே என்னுத இயற்கை என்ன, விளையா விதையை எடுத்தளித்த இளையான் குடிமாறனென்ன, கண்ணையே அப்பிய வேடர்குலத்தவனென்ன, தனத்தையும் தன்னையுமே அளித்த அமர்நீதி என்ன, இவர் போன்றார் பக்தியின் பொருட்டுச் செய்ததில் பாவியேன் யான் பத்தாயிரத்தில் ஓர் பங்கும் செய்தேனில்லை, பாமனே என்று எண்ணினர்-எண்ண வைத்தது பெரிய புராணம்.

பெரியபுராண காலத்துக்குப் பிறகு, 11, 12-வது நூற்றாண்டுகளிலும் அதற்குப் பிறகும், செல்வம் சீரழிந்தது, பாடுபடுவோர் பட்டினி கிடந்தனர், பாடுபடாத பார்ப்பன குலம், நாடு ஆண்டவரை மிரட்டி நல்வாழ்வு வாழ்ந்தது. செல்வம் இருந்தும் சீரழிக்கப்பட்டு, உழைத்தும் பயன் காணுது குமுறும் மக்கள், வெளிநாடுகளிலே புரட்சிசெய்திருப்பர்—இங்கோ, 'புண்ய' கைங்கரியம் செய்கிறான் பூபதி, இதைக் குறைகூறுவதே பாபம், என்று மக்கள் வாயடக்கி வாழ்ந்தனர், இதற்குப்பெரியபுராணம் மிகமிகப் பயன்பட்டது-மன்னரை மாற்றான்முன் மண்டியிடச் செய்ய—மக்களை மதியிழக்கச் செய்ய! யாரார், ஆரியர் வாழ்வுக்கேற்றவிதமான ஆட்சி நடத்தினரோ அவரெல்லாம்புகழப்பட்டனர்—'இம் மன்னன் மனு தர்மத்தை அனுஷ்டிக்கிறான்' என்று, வீரராஜேந்திரனை விப்பிரர் புகழ்ந்தனர் என்று செப்பேட்டில் செதுக்கப்பட்டிருக்கிறது. காணும் கல்வெட்டுகள், எதைக்காட்டுகின்றன நமது காவலர்கள், மக்கள் உழைத்துத்தேடிய பொருளை எல்லாம், ஆரியருக்குக் காணிக்கையாகத் தந்த, கண்மூடிச் செயலைத்தான். கோயில் அமைப்பதும், அங்கு கொட்டு முழக்கும் கூத்தாடுவோரும், குழலூதியும் அமைப்பது, திருப்பணி என்று பெரியபுராணம் தெரிவித்தது—அத்தகைய செயல் புரிந்தோர், பரமனின் அருள்பெற்றனர் என்று பாடல்கள் பாடப்பட்டன. எனவே மன்னர்கள், "காட்டு கோயிலை! வெட்டு திருக்குளம்! கொடு காணிக்கை! தானதருமங்களைத் தயங்காமல் செய்! சதுர்வேதி மங்கலங்களை ஏற்படுத்து" என்று உத்தரவிட்டனர். ஊரெங்கும் கோயில்! கோயிலெல்லாம், அந்தக் கும்பல்!! தாளச்சத்தம், மேளச்சத்தம்! மக்களின் பட்டினிக் குரலை மன்னர் காதில் விழவொட்டவில்லை.

போர் முறையிலே புல்லர் கையாளும் திட்டம் ஒன்றுண்டு, அதாவது எதிரி உபயோகிக்கும் நீர்நிலையங்களிலே நஞ்சு கலந்துவிடுவர், அங்கு நீர்பருகி எதிரிமாள்வர்; அதுபோல, பெரிய புராணம் முதலிய ஏடுகள், தமிழகத்திலே தூவிய எண்ணங்கள் தமிழர் வாழ்விலே நஞ்சு புகுத்திவிட்டன; நசித்தது தமிழகம். தமிழ் நாட்டிலே "சதுர்வேதி மங்கலங்கள்" அமைத்தனரே அதைவிட வேறு என்ன சான்று வேண்டும், தமிழரின் செல்வம் ஆரியருக்குக் கொட்டி அழப்பட்டது என்பதை விளக்க.

மன்னர்கள் 'வரி' கேட்பதிலோ. குறைவு கிடையாது. கடமை, குடிமை என்று இருவகை வரி; கடமை அரசகாரியத்துச் செலவுக்காக, அஃதே அனைவரும் புகழும் ஆறிலொறு கடமை என்பது. குடிமை என்பது பலர் தெரிந்து கொள்ளாதது; அது ஆலய காரியத்துக்கும் ஆரிய சேவைக்குமான செலவுக்கென்று மன்னர் திரட்டியது. நிலத்துடன் நின்றுவிடவில்லை வரி, தொழிலுக்கு உண்டு; பொருளுக்கு உண்டு—சுங்கவரி இருந்தது.

எரிமீன்காசு—மீன்பிடிப்போர்
இடைப்பட்டம் ஆடுமேய்ப்போருக்கு
இடங்கை வரி—இடங்கை தொழிலாளருக்கு
கடை வரி வியாபாரிக்கு
குசக்காணம்—குயவருக்கு
ஓடைக்குழி—ஓடம் விடுவோருக்கு
செக்குக் கடமை வாணியருக்கு
வண்ணார்பறை—வண்ணாருக்கு
விற்பிடி—வேடருக்கு

என்ற முறையிலே தொழில் வரிகள் வசூலிக்கப்பட்டன. இரும்பு, கள், உப்பு, ஆகியவற்றுக்கு வரி. பொருளை ஏற்றுமதி செய்தால்வரி. இறக்குமதிக்கு வரி. ஸ்தலதாயம், மார்க்கதாயம், மாமூல தாயம் என்ற வரி வகைகள். இவ்வளவுவரியும் கிடைத்தபோது வாட்டமேது மன்னனுக்கு! வாணிபர்கள் ஈட்டிய பொருளைக் குவித்த பிறகு, வறுமை ஏது நாட்டிலே! ஆனால் வளமான இந்நாட்டிலே! சலியாத உழைப்பால் மக்கள் சேகரித்த செல்வமெல்லாம், எப்படிப்பாழாயின என்பதைச் செப்பேடுகளும், சிலாசாசனங்களும், கல்வெட்டுகளும் தெரிவிக்கின்றன.

பெரிய புராணம், பரவிய நாட்டிலே, சிவனருளும் சேர்ந்து பரவிற்றோ? பஞ்சம் பரவிற்று! ஏன் பரவாது? கிடைக்கும் பொருளெல்லாம் சதுர்வேதி மங்கலத்தாருக்குச் செலவாகிவிடவே, மக்கள் பஞ்சத்தால் வாடலாயினர். பெரிய புராணத்தைப் படித்துப் பயன் காணவில்லை! தொண்டர் பெருமையை உணர்ந்து, ஊர் சுகப்படவில்லை! தமிழகத்திலே பஞ்சம் தலைவிரித்தாடிற்று! செல்வம் கொழித்த தமிழகத்திலே, பட்டினிக்குரல் பலவங்கப் பஞ்சங்கள்? தங்கச் சிலைகள் கோயிலிலே! வைரமுடிகள் அவை தம் சிரங்களிலே! சிங்கத் தமிழர் செத்து வீழ்ந்தனர் பாதையிலே, பஞ்சத்தால்! சாந்தத்தையும், சீலத்தையும், பக்தியையும் உன்பாக்கிய ஏடன்றோ என்று கொண்டாடுகிறார்கள் பெரிய புராணத்தை. ஆனால் அதை நாட்டிலே பரப்பி மக்களையும், மன்னரையும் நீறுபுசிகளாக்கிய பிறகு, நாடு செழித்ததோ, வளம் வளர்ந்ததோ? கிடைத்ததையெல்லாம் ஆலயத் திருப்பணிக்கும், அம்மையப்பன் திருவிழாவுக்குச் செலவிட்டு, மக்கள் ஓய்ந்தனர். பஞ்சமும் வந்துள்ளது, அதுபோது சாய்ந்தனர்—சிவலோகம் சென்றனர், சோற்றுக்கில்லாதார் தொகை தொகையா?

பஞ்சம்

1054. ஆலங்குடி, தஞ்சை மாவட்டம்.
1116-1119. தக்ஷிணம்.
1124. திருவத்தூர்
1160. திருக்கடையூர், தஞ்சை.
1201. திருப்பாம்பரம், ”
1241. திருமங்கலக்குடி, ”
1241. நந்தலூர், கடப்பை.
1390-1. திருப்பனங்காடு, வட ஆற்காடு.
1391. திருக்களார்—தஞ்சை
1509. கனகஹல்லி, பெங்களூர்

என்ற முறையிலே, இந்தத் தமிழகத்திலே பஞ்சம் தலைவிரித்தாடிற்று. பஞ்சாட்சரம் ஜெபித்துக் கொண்டு இருந்த மக்கள் இந்தப் பஞ்சங்களைத்தானு பரிசுகளாக பரமனிடமிருந்து பெறவேண்டும்! பக்திப் பிரவாகத்தின் விளைவு இதுவாகவா இருக்கவேண்டும்? சைவம் தழைத்தது தொண்டர் பெருமையைச் சேக்கிழார் செந்தமிழில் எடுத்துக் கூறியதால் என்று பூரிப்படையும் அன்பர்கள், இத்தனை பஞ்சங்களும் 11-வது நூற்றாண்டிலே பக்திப் பரவசத்திலே பொருளைப் பாழாக்கத் தொடங்கிய தமிழகம் 11-லிருந்து 15-வது நூற்றாண்டு வரையிலே பஞ்சத்தால் சிக்கித்தவித்ததை, திருஅருளின் மாட்சிமையிலே ஒன்றாகக் கொள்வரோ? சேக்கிழார் குறிப்பிடும் தலங்களிலே பெரும்பகுதி தஞ்சை மாவட்டமாக இன்றுள்ள சோழவளநாட்டிலே உள்ளன. இவரும் சோழனிடமே மந்திரி. சோழநாடு சோறுடைத்து என்பது முதுமொழி, அந்நாடு. பஞ்சத்தால் நலிவதா? பணம் குவியாமலா இருந்தது! பணம் ஏராளம்! அவை கோயில்களிலே குவிந்து கிடந்தன. பூர்போசா எனும் வரலாற்று எட்டாசிரியர் கூறுகிறார், 'மாலிக்காபூர்' என்ற இஸ்லாமியவீரன் தென்பகுதியிலே வெற்றிகள் பல பெற்றுத் திரும்பும்போது 1310ல் 96,000 மணங்கு எடையுள்ள தங்கத்தைக்கொண்டு போனான்' என்று. 2000 ஒட்டகங்களின்மீது ஏற்றப்பட்டனவாம் அந்தப் பெரும் பொருள்கள்! ஆகப் பொருள் இருந்தது, அதனை 'அருள்வாங்க' காதைகளிலே கூறப்பட்ட முறைப்படி செலவிட்டனர். இலாபம், இலட்சக் கணக்கிலே மக்கள் செத்ததுதான். இத்தகைய நிலை ஏற்படக்காரணமாயிருந்தது. பக்திக்காக எதையும் செய்வதே பெருமை, தொண்டர் தீரம் என்று பெரிய புராணம் புரிந்த போதனைதான் என்று கூறுவது தவறா? பெரிய புராணத்திலே பக்திக்காக எதையும் செய்யும் சித்தம் படைத்தவர்களின் கதைகள் தானே உள்ளன. அந்த ஏட்டைப் புண்ய ஏடு என்றும், ஆண்டவனே அடி எடுத்துக்கொடுக்க அருமை மந்திரியார் அழகுறப் பாடியது என்றும் கூறிவிடவே. மக்கள் அதிலே கண்டக் கருத்துக்களைக் கூடுமான மட்டில் அவரவர் சக்தி

(3ம் பக்கம் பார்க்க)

# காந்தியால் வளர்த்த காங்கிரஸ்

(0)

## வீரமுத்து லிமிடெட்டால் வளர நேரிடுகிறதே!

### எங்களைக் கண்டு ஏன் தம்பி பயப்படுகிறாய்?

சைதையில் இரா. நெடுஞ்செழியன்

சென்னை சைதாப்பேட்டை 9-12-50 அன்று மாலை 5-30க்கு சைதை தி. மு. க. கிளை ஆண்டு விழா தோழர் வே. நடேசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதிகாரிகளின் ஆணவப்போக்கின் விபரீதத்தினால் சுவரொட்டியின் மூலம் அறிவித்திருந்த இடத்தில் நடத்த முடியாமல் தொலைவில் உள்ள பஸ் நிலையத்திற்கருகில் கூட்டம் நடந்தபோதிலும் 10000க் கணக்கான மக்கள் இதுவரை சைதை கண்டிராதபடி கூடியது குறிப்பிடத்தக்கது.

முதலில் எல்லோரையும் வரவேற்று சைதை தி. மு. க. துணைச் செயலாளர் தோழர் த. சம்பந்தன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது 'சென்ற ஆண்டு நாம் எந்த அளவில் பணியாற்றியுள்ளோம்' அந்த பணி எந்த அளவிற்கு மக்கள் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் உலகுக்கும் பயன்பட்டது என்பதை எண்ணவும். இந்த ஆண்டு நாம் எந்த அளவிற்கு பணியாற்றல் வேண்டும் என்பதையும் உறுதிப் படுத்தவும்தான் என்றும் கூறி வரவேற்றார்.

அடுத்து 'திராவிடன்' ஆசிரியர் தோழர் என். வி. நடராசன் பேசுகையில் ஆட்சியாளரின் ஆணவப் போக்கையும் அடக்குமுறையையும் கண்டித்தார். தறித் தொழிலாளரின் தலையெழுத்தை தற்கால ஆட்சியாளரால் மாற்ற முடியாது என்றும் இன்பத் தனித் திராவிட நாடு கிடைத்தால்தான் மாற்ற முடியுமென்றார். காங்கிரஸ்காரர்களே விரைவில் திராவிடநாடு கோரி நம்மோடு சேரவேண்டிய நிலை ஏற்படும் என்றும் அதற்கு சான்றாக சென்னை சட்டசபையில் நால் தட்டுப்பாடு விவாதத்தின்போது தோழர் நாகராஜ மணியகாரர் பேசிய பேச்சை குறிப்பிட்டார். அதாவது, சென்னை மண்டலம் மத்திய அரசாங்கத்தின் தொடர்பிலிருந்து துண்டித்துக்கொள்ள வேண்டும்.' இப்படி பேசியது ஓர் காங்கிரஸ்காரர். ஆகையால் அவர் நாட்டின் நலிவைத் தீர்க்கப்பாடுபடுபவர். அதையே நாம் கூறினால் 'தேசத் துரோகிகளா' என்று மற்றும் பல கூறி முடித்தார்.

அடுத்து தோழியர் சத்தியவாணி முத்து, அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது உணவுப் பிரச்னையிலுள்ள ஊழல்களைப் பற்றியும், அறிவில்லாதவர்கள்தான் நாட்டை ஆளுகின்றார்கள் என்றும், அதற்கு சான்றாக நாரணமங்கலம் வழக்கின் விசாரணைப் போக்கை எடுத்துக் காட்டியும் மற்றும் பல நகைச்சுவையாக பேசினார்.

அடுத்து பலத்த கைத்தட்டல்களிடையே 1-30மணி நேரம் இரா. நெடுஞ்செழியன் பேசியதன் சுருக்கமாவது 'நான் இங்கே வந்தபோது பல தோழர்கள் காங்கிரஸ்காரர்களின் கழகத்திற்கு எதிர்ப்பிரசாரத்தைப்பற்றி என்னைக் கேட்டார்கள். நான் உங்களுக்கு கூறுவதெல்லாம், அவர்கள் நமது அலட்சியத்திற்குரியவர்களே யன்றி ஆராய்ச்சிக்குரியவர்களல்ல. அவர்கள் நம்மைப்பற்றி பேசுகிறார்கள் என்றால் அந்த அளவுக்கு நாம் வளர்ந்திருக்கிறோம் என்று பொருள் ஆகவே நீங்கள் அதைப்பற்றி கவலைகொள்ளாதீர்கள். ஆனால் இதிலிருந்து ஒரு உண்மை வெளிப்படுகிறது அதாவது லாலா லஜபதிராயால் வளர்க்கப்பட்ட காங்கிரஸ், திலகர் கோகலே முதலியவர்களால் உயர்த்தப்பட்ட காங்கிரஸ், கப்பலோட்டி செக்கிழுத்த வ. உ. சி. யால் வளர்க்கப்பட்ட காங்கிரஸ் தென்னாப்ரிக்காவில் இந்தியர்களுக்காக பாடுபட்டு அங்கு வெள்ளையன் பூட்ஸ்காலால் உதைத்து தன்பல் போயும் அவனை எதிர்க்காமல், ஒருவன் ஒரு கன்னத்தில் அடித்தால் மற்றொரு கன்னத்தை காட்டு என்று இயேசுவின் அறிவுரையை பின்பற்றிய அகிம்சையே உருவெடுத்த காந்தியாரால் வளர்க்கப்பட்ட காங்கிரஸ் இன்று வீரமுத்து லிமிடெட் கம்பெனிகளால் வளர்க்கப்படவேண்டிய கேவல நிலையை அடைந்தது என்பதை நீங்கள் உணரவேண்டும் (கைதட்டல்) எங்கள் இயக்கம் மக்களுக்கு அறிவுப் பணிபுரியும் இயக்கம் இந்த இயக்கத்தைக்கண்டு ஆயிரக்கணக்கான தினசரி வார, மாத இதழ்களை வைத்துக்கொண்டு, மத்திய அரசாங்கம் 176 கோடி செலவில் வைத்திருக்கும் இராணுவமும், அது போதாதென்று இந்த மாகாணம் 7 கோடி செலவில் போலீசையும் வைத்துக்கொண்டு, ஒரே ஒரு தினசரிப் பத்திரிகை, அதுவும் நடுவில் ஆறுமாத காலம் வரவில்லை. ஒருவார காலமாக வருகிறது. ஐந்து, ஆறு, வார, மாத வெளியீடுகளை வைத்திருக்கும் எங்களைக் கண்டு ஏன் தம்பி பயப்படுகிறாய்? எங்கள் கொள்கை நிரந்தரக் கொள்கை. அது இன்றில்லாவிட்டாலும் இன்னும் பத்து ஆண்டு கழித்தாவது அல்லது இருபது ஆண்டுகள் சென்றாவது நாட்டில் நிலைக்கத்தான் செய்யும். இன்றே பாருங்கள், நாமக்கல் கவிஞர் காங்கிரஸ்காரர். அவர் மகன் நமதியக்கம். எத்தனைபேர் வேண்டும் அதுபோல உதாரணத்திற்கு? இன்று வேண்டுமானால் இவர்கள்

எங்கள் தியாகமூர்த்திகள், எங்கள் நேரு, எங்கள் பட்டேல் இருக்கும் நாட்டைவிட்டு எப்படி பிரிவோம் என்று சொல்லலாம். இந்த நேரு, பட்டேல் காலத்திற்குப்பிறகு இவர்கள் நமது நாட்டின் நிலையைப் பற்றி இவர்கள் உணர்ந்துதான் தீர வேண்டும். இன்று வேண்டுமானால் எங்களை சிறையிலடைக்கலாம், நாங்கள் எழுதிய புத்தகங்களை தடை செய்யலாம். ஆனால் ஒரு நெடுஞ்செழியன் போனால் ஆயிரம் நெடுஞ்செழியன்களும் ஒரு அண்ணா போனால் ஆயிரம் அண்ணாக்கள் தோன்றத்தான் செய்வார்கள். திராவிட நாட்டின் பிரிவினையின் அவசியத்தைப்பற்றியும் நாட்டின் வளத்தைப்பற்றி பல முறை கூறியுள்ளோம். இந்தப் பதவிப் பித்தர்களுக்கு நாடு பிரிந்தால் பதவி கிடைக்காது என்று எண்ணலாம். அந்தப்படியாரும் எண்ணம் வேண்டாம். நாடு பிரிந்தவுடன், காமராஜரையும் அனுப்புவோம் ஆப்ரிக்காவுக்கு ஸ்தானிகராக" என்றும் மற்றும் தற்கால அரசியலைப்பற்றி விரிவாக பேசி, சமயத்தைப்பற்றி பேச ஆரம்பித்தபோது போலீஸார் குறிப்பிட்ட நேரம் ஆகிவிட்டபடியால் அத்துடன் முடித்துக்கொண்டார்.

கடைசியாக தோழர் சுப்ரமணியம் அவர்கள் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

---

## தி. மு. கழக பொதுக் கூட்டங்கள்

**18—12—50**

**சின்ன சேலம்**

தோழர்கள் ஈ. வி. கே. சம்பத், ஈரோடு அப்பாவு.

**களம்பூர்**

தோழர்கள் எம் எம். புருஷோத்தம், கே. சுப்பரமணியம், யு. எல் ஷண்முகம்.

**காசிமேசபுரம் (திருக்குற்றலம்)**

தோழர் இரா. நெடுஞ்செழியன்.

**19—12—50**

**தூத்துக்குடி**

தோழர் இரா. நெடுஞ்செழியன்.

---

## ராபின்சன்பார்க் கூட்டம்

17—12—50 ஞாயிற்றுக்கிழமை மாலை ராபின்சன் பார்க்கில் நடைபெறுவதாக இருந்த திராவிடமுன்னேற்றக் கழக கூட்டம் இந்தியாவின் உதவி பிரதமர் சர்தார்வல்லபாய்படேல் மரணத்தை முன்னிட்டு ஒத்திவைக்கப்பட்டதாக 3-வட்ட தி. மு. க. செயலாளர்

## கோபுரம் ஏறி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யனுசாரம் அனுஷ்டிக்க வேண்டும் என்று உறுதி கொண்டனர், அதன் பயனாக, ஊரிலே நாசமே வந்துற்ற போதிலும், ஈசன் சேவை செய்தால் போதும். மக்கள் மடிந்தாலும் கவலையில்லை என்று இருந்தனர். பஞ்சம் தன் பசியைத் தீர்த்துக் கொண்டது. ஏற்கனவே தரப்பட்டுள்ள 'பேதை' போதாதென்று என் நண்பர் புலவர் இராசமாணிக்கனாரும், அந்தத் திருப்பணியிலே ஈடு படுகிறாரே? ஆண்டவன் முதலடி எடுத்துத்தந்தார் ஆகவே இது அருள் நூல் என்று நீறுபூசிக்கொண்டு தூக்கி சொன்னார் எடு பல படித்த என் நண்பர் நாடு நலிவதை மறந்து. இந்த ஏட்டிலே கல் வெட்டும் சரித்திரமும் உண்டு எனவே, இதனை தள்ளலாகாது. உன்று கூற முன்வந்துவிட்டார். எக்காரணங்கொண்டு கூறியதாக வேனும் இருக்கட்டும், இதுபோல அவர் கூறியதால், பழமையின் பிடியை, வர்ணாஸ்ரமத்தின் வலிவை ஜாதிப் பித்தரின் நிலையை முறையே பலமாக்குகிறார், வீசுகிறார், உயர்த்துகிறார் என்றுதானே ஏற்படும். இந்தக் காரியம் செய்ய இவ்வளவு பெரிய படிப்பு வேண்டாமே, 'அரஹரகமப்பார்வதி பதயே, என்று கூவுமளவு, குரல் வலிவு கொண்டாலே போதுமே என்றுதான் நான் கூறுகிறேன். கோபுரமேறி கோழி மேய்ப்பானே இந்த குப்பை மேட்டிலேயே அந்த காரியத்தை எளிதாகச் செய்துவிடலாமே என்று கூறுகிறேன்.

"திராவிட நாடு"

---

## வ. ஆ. மாவட்ட தி. மு. கழக தோழர்களுக்கு

சில தினங்களாக எனக்கு, சர்க்காரால் தடை செய்யப்பட்ட நாடகங்கள் நடத்தவும், தடை செய்யப்பட்ட புத்தகங்கள் மக்களை கூட்டி படிக்கவும் விரும்பி, என்னிடம் அனுமதி கேட்கிறார்கள் நமது கழக தோழர்கள்.

சிலர் தேதி குறிப்பிட்டு நடிக்கவும் படிக்கவும் போவதாகவும் கடிதம் எழுதியிருக்கிறார்கள். ஆகவே நமது மாவட்ட கழக தோழர்கள் மாவட்ட கமிட்டியின் அனுமதி பெறுமலோ, அல்லது சென்னை தலைமை நிலையத்திலிருந்து அனுமதி பெறுமலோ, நாடகம் நடத்தவோ, புத்தகம் படிக்கவோ கூடாது என்று இதன் மூலம்நமது கழக தோழர்களுக்கு தெரியப்படுத்திக் கொள்கிறேன். மீறி நடப்பவர்கள்மீது மாவட்ட கமிட்டியின் சார்பில் நடவடிக்கை எடுக்கப்படும்.

போளுர் கே. சுப்ரமண்யன்
செயலாளன்

---

## மதகுரு இல்லாமணம்

போளுரில் 14-12-50 அன்று காலை 8-30 மணிக்கு தோழியர் இராசலக்குமிக்கும் தோழர் இ. வெ. முத்துக்கும். புரோகிதரின்றி மணம் நடந்தது. அது போது சின்னதுரை அவர்கள் தலைமையில், புலவர்கள் குழந்தையா, சுந்தராசனும், தி. மு. க. செயலாளர் இராசமாணிக்கம் முதலியோர் பேசினர். பல தோழர்கள் வாழ்த்துக்களை

செங்கற்பட்டு மாவட்ட

# தி. மு. கழக முதல் மாநாடு

காஞ்சீபுரம்

(இடம் :—பெரியகாஞ்சீபுரம் தர்கா மைதானம்)

**டிசம்பர் 23, 24 சனி, ஞாயிறுகளில்**

மு. அரங்கசாமி பந்தலில் நடைபெறும்.

தலைவர் :

## தோழர் சி. பி. சிற்றரசு

துவக்குபவர் :

## தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி

மாநாட்டில் கழகப் பொதுச்செயலாளர்

## அண்ணாதுரை கலந்துகொள்வார்

மாநாட்டில் கலந்துகொள்ளும் கழக முன்னணி வீரர்கள்:

இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, E. V. K. சம்பத், கா. அப்பாதுரை, பூ. கணேசன், A. சித்தையன், காஞ்சி-கலியாணசுந்தரம், N. S. இளங்கோ, இரா. இளம்வழுதி, கவிஞர் கண்ணதாசன், A. K. வேலன், K. K. நீலமேகம், N. ஜீவரத்தினம், இராமாமிர்த அம்மையார், சத்தியவாணிமுத்து, அலமேலு அப்பாதுரை, N. V. நடராசன், 'திராவிடன்' ஆசிரியர், காஞ்சி-மணிமொழியார், 'போர்வாள்' ஆசிரியர், முருகு சுப்பிரமணியம், 'பொன்னி' ஆசிரியர், ப. கண்ணன், 'பகுத்தறிவு' ஆசிரியர், E. V. A. வள்ளிமுத்து, கோவில்பட்டி நகரசபைத் தலைவர், ப. உ. சண்முகம், திருவண்ணாமலை நகரமன்றத் தலைவர், K. சுப்பிரமணியம், போளூர், K. கோவிந்தசாமி, G. பராங்குசம், புலவர் கோவிந்தன், S. R. சுப்பிரமணியம், K. A. மதியழகன், இராம. அரங்கண்ணல், தில்லைவில்லாளன், ஈழத்துஅடிகள்.

நிகழ்ச்சிகள்

### 23—12—50 சனிக்கிழமை

காலை 10 மணிக்கு கொடியேற்று விழா, காலை 10-30 மணிக்கு வரவேற்புரை, (சி. வி. எம். அண்ணாமலை) காலை 11-30 மணிக்கு துவக்கவுரை, (ஏ. வி. பி. ஆசைத்தம்பி)

இடைவேளை

மாலை 3 மணிக்கு தலைவர் தேர்தல், மாலை 3-30 மணிக்கு தலைவர் முன்னுரை, (சி. பி. சிற்றரசு) மாலை 5 மணிக்கு இசை நிகழ்ச்சிகள், இரவு 10 மணிக்கு நாடகம்.

### 24—12 50 ஞாயிற்றுக்கிழமை

காலை 9 மணி முதல் நண்பகல் 1 மணி வரை கழகமுன்னணி வீரர்கள் சொற்பொழிவு.

இடைவேளை

மாலை 3 மணிக்கு தீர்மானங்கள், மாலை 5 மணிக்கு பொதுச் செயலாளர் அண்ணாதுரை சொற்பொழிவு, மாலை 6-30 மணிக்கு தலைவர் முடிவுரை, (சி. பி. சிற்றரசு) இரவு 10 மணிக்கு நாடகம்.

மாநாட்டில் கலந்துகொள்ளும் இசைவாணர்கள்:

திருச்சி M. M. மாரியப்பா, திருவாரூர் T. V. நமசிவாயம், நாகூர் அனீபா, சென்னை K. R. செல்லமுத்து, காஞ்சி K. புண்ணியகோட்டி.

நடிப்புப்புலவர் K. R. ராமசாமி, பொதுச்செயலாளர் அண்ணாதுரை பங்கேற்று நடிக்கும் நாடகங்கள்

| "சந்திரமோகன்" | "நீதிதேவன்மயக்கம்" |
|---|---|
| சனி இரவு | ஞாயிறு இரவு |

| செயலாளர்கள் : | வரவேற்புக் குழுத்தலைவர் : | தொண்டர்படை தலைவர்கள் : | விளம்பர உறுப்பினர்கள் : |
|---|---|---|---|
| சே. கோ. பெருமாள், D. சபாபதி. | C. V. M. அண்ணாமலை. | C. பஞ்சாட்சரம், K. T. S. மணி. | R. K. மூர்த்தி, E. எத்துராசு. |

மாநாட்டு கட்டணம் இருநாட்களுக்கும் :—

வரவேற்பாளர் ரூ. 5 பிரதிநிதி ரூ. 2 பார்வையாளர் ரூ. 1 பெண்களுக்கு அ. 8

நாடகத்துக்கு தனிக்கட்டணம் கிடையாது.

மின்சார விளக்கமைப்பு : சென்னை P. மோகம்பரம் & P. ராமசந்திரன்

---

### தமிழர் விளையாட்டுக் கழகம்

பம்பாய் தமிழர் விளையாட்டு கழகத்தின் மாதாந்தரப் பொதுக் கூட தோழர் ஆர். சுவாமிதாஸ் தலைமையில் 2—12—50ல் கடந்த மாத அறிக்கை வாசிக்கப்பட்டு எல்லோராலும் ஏகமனதாக ஒப்புக்கொள்ளப்பட்டது. வரவு செலவு கணக்கு வாசிக்கப்பட்டும் ஒப்புக்கொள்ளப் பட்டது. வாவு செலவு கணக்கு வாசிக்கப்பட்டு. ஒப்புக்கொள்ளப் பட்டதும், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. 1. நமது கழகத்தை நிறுவியவரும். கழக ஆரம்ப கால முதல் அயராதுழைத்த அன்பருமாகிய தோழர் ஆ. கமலநாதன் அவர்கள் திருமணத்தின் போது, வாழ்த்திதழ் வாசிப்பதெனவும், மலர் மாலை அணிவிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

நமது கழகத் தலைவர். எஸ். எம். சங்கர் அவர்கள் துணைவியாருக்கு [illegible] குழந்தை பிறந்து இறந்ததைக் குறித்து சேயை இழந்து துக்கத்தில் ஆழ்ந்திருக்கும், பெற்றோர்களுக்கும். அன்னார் குடும்பத்தாருக்கும், இக் கழகம் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

### தமிழர் திருநாளன்று வெளிவருகிறது

## "முன்னேற்றமுரசு"

(வார வெளியீடு)

ஆசிரியர்: பி, ராமசாமி

புரட்சி நடை-புதுமை கருத்துக்கள்-வீணர்விலா நொருக்கும் சாட்டையடி தி. மு. க. லட்சியஏடு.

எல்லா ஊர்களிலும் முன்பணம் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் தேவை.

விவரங்களுக்கு:—நிர்வாகி

81-EA, ரோடு சென்னை-21.

### தமிழன் திருநாளன்று "ஊருக்கு உழைத்தவர்கள்"

தீட்டியவர்: மா. தங்கவேலர்

புத்துலகை காண துடிக்கும் புதுமையாளர்களுக்கு, புத்துலகை சிருஷ்டிக்க அரும்பாடுபட்டு நாடு, புதுமையடைய தம்மை தியாகம் செய்துகொண்ட புத்துலக மேநாட்டு அறிஞர்களின் வாழ்க்கைப் புரட்சிகளை படம் பிடித்துக் காட்டும் நூல். (விலை 0-5-0) தனி பிரதி 0-6-3 அனுப்பவும்

விற்பனையாளர்களுக்கு 25% வீதம் கழிவு தரப்படும்.

ஆராய்ச்சி நிலையம்

சென்னை-5.

### திருந்திய திருமணம்

மாயூரம், 13-12-50ல் தோழர் ப. சின்னுனுக்கும் தோழியர் வெள்ளிச் செல்விக்கும் போனம் திராவிடர் கழகத் தலைவர் எஸ். மகாதேவன் தலைமையில் நடந்தது. அன்பர்கள் வாழ்த்தும் அன்பளிப்பும் அளித்தனர்.

### சந்தா விவரம்

1. ஆண்டு ரூ. 12—8—0
6. திங்கள் ரூ. 7—0—0
3. திங்கள் ரூ. 3—8—0

தனிப்பிரதி அரையணா. மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

### விளம்பர விகிதம்

அங்குலம் ஒன்றுக்கு ரூ. 5—0—0

நீடித்த விளம்பரங்களுக்கு சலுகையுண்டு விவரங்களுக்கு எழுதவும்.

"மாலைமணி" பதிப்பகம்

மண்ணடி-சென்னை-1

Edited, Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty street, Madras-1.